
Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 1st of Every month
Date of Posting : 5th & 6th of Every month
Regd. No. TN / CC (S) DN / 119/ 15-17
Licensed to Post without Prepayment
WPP No. TN/PMG(CCR)WPP-608/15-17

வேணு : 21 | அக்டோபர் 2015 | கானம் : 3




வாணி ஆர்டன் சிங்கப்பூர் சாதனை புத்தகத்தில் சிங்கப்பூர் நாமத்வார் - Shaking Hands Across Continents Theme

Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

NO FAME NO NAME NO SELF INTEREST ONLY GOD

ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.15/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ180/-

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை



வேணு : 21 | அக்டோபர் 2015 | கானம் : 3

Delivered by India Post
www.indiapost.gov.in



செப்டம்பர் 21 - ராதாஷ்டமி - மதுரபுரி ஆஸ்ரமம்





செப்டம்பர் 5-14 கோகுலாஷ்டமி உத்ஸவம் - நிகுஞ்சோத்ஸவம்

இசை பேரொளி சகோதரிகள் ஸ்ரீமதி ரஞ்சனி ஸ்ரீமதி காயத்ரி
கர்நாடக இசை - செப்டம்பர் 11 மாலை








Love to Share Foundation America - Fifth Annual Health Event - Life and Soul 2015




ஆகஸ்டு 31 தூத்துக்குடி நாமத்வாரில் "மதுரஸ்மரணம்" – My GURU As I SEE HIM




ஆகஸ்டு 31- தூத்துக்குடி நடேசன் மன்றத்தில் புராநவா போட்டி




செப்டம்பர் 3 பெங்களூர் சீதாராம ஹாலில் புராநவா போட்டி





செப்டம்பர் 12 - ஜானவாசம்



செப்டம்பர் 14 -ரதோத்ஸவம்



13.9.2015 ராதா கல்யாண தினம் – "அன்புமித்தன் ஹரநாதன் கடிதங்கள்" - தமிழ் நூல் வெளியீடு – முதல்பிரதி பெறுபவர் மூத்த பத்திரிக்கையாளர் மற்றும் ஆன்மீக பேச்சாளர் திரு.[illegible], அருகில் (இடது) நூல் ஆசிரியர் திரு.ஹரகோபால் சேபுரி மற்றும் (வலது) Tanjore Sastra College Dean Dr.S.வைத்தியசுப்ரமண்யம்

# சேங்கனூரில் ஸ்ரீ ப்ரேமிக ஜன்மஸ்தான்



ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 21 அக்டோபர் 2015 கானம்: 3

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

**இந்த இதழில் ...**


| | |
|---|---|
| மதுரமான மஹனீயர்-235 | 05 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 11 |
| பாகவத பழம்- ஸ்க 2/29 | 13 |
| ஸ்ரீப்ரேமிக ஜன்மஸ்தான் | 17 |
| வார்லி ஆர்ட்ஸ் | 18 |
| வீடு தேடி வருவான் விட்டலன் | 24 |
| சனாதன கோஸ்வாமி | 26 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 29 |
| ப்ருந்தாவன கண்ணன் | 33 |
| மாலே மணிவண்ணா | 35 |


நாமான்யநந்தஸ்ய ஹதத்ரப: படன் குஹ்யானி பத்ராணி
க்ருதானி ச ஸ்மரன்
காம் பர்யடம்ஸ்துஷ்டமநா கதஸ்ப்ருஹ: காலம் ப்ரதீக்ஷன்
விமதோ விமத்ஸர:

வெட்கத்தை விட்டு விட்டு, ரஹஸ்யமானதும் பல நன்மைகளை கொடுக்க வல்லதுமான ஸ்ரீவாசுதேவனின் பெயர்களை சொல்லி கொண்டு, அவனது செய்கைகளை நினைத்தவாறு, ஆசை, அகங்காரம், பொறாமை அற்ற மகிழ்ச்சியான மனத்துடன், பகவான் சொன்ன காலத்தை எதிர்பார்த்தவாறு பூமியை சுற்றி வந்து கொண்டிருந்தேன்.

-நாரதர் வியாசரிடம் சொல்வது (பாகவதம் - 1.6.27)

## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

ராகம் : ஸிம்மேந்த்ர மத்யமம் தாளம்: ஆதி

சங்கபுரீமஹம் ப்ரணமாமி

(சங்கபுரீமஹம்)

சங்கசக்ரதர ஸ்ரீநிவாஸாலயாம்
ஸகீதேவீஸமேத சக்திகிரீஸாலயாம்

(சங்கபுரீமஹம்)

வ்யாக்யானசக்ரவர்த்தீ ஸ்ரீக்ருஷ்ணஸூரீ
ஜனனபாக்யேன பரமபவித்ராம்

(சங்கபுரீமஹம்)

சிவபக்தாக்ரகண்ய பக்தஸார்வபௌம
சண்டிகேஸ்வர அவதாரஸ்தலாம்

(சங்கபுரீமஹம்)


கூஜத்கோகில பிருந்தயுதாம்
ஸுப்ரமண்யநதீதீரஸ்திதாம்

(சங்கபுரீமஹம்)

பாகவதபரமஹம்ஸ ஸார்வபௌம
ப்ரேமிகேந்த்ரஸத்குரு அவதாரஸோபிதாம்

(சங்கபுரீமஹம்)

முன் அட்டை: சேங்கனூர் ஸ்ரீப்ரேமிக ஜன்மஸ்தானில் கண்ணாடி அறை
பின் அட்டை - சிங்கப்பூர் நாமத்வார் அன்பர்கள் வார்லி ஆர்ட்ஸ் மூலம் சாதனை - சிங்கப்பூர் புக் ஆஃப் ரெகார்ட்ஸில் இடம்



# மதுரமான மஹனீயர் - 235

-டாக்டர். ஆ.பாக்யநாதன்

பக்தி என்பது உண்மை பக்தனின் உள்ளத்தில் ஏற்படும் உன்னத பாவமே என்றும், அது ஒரு கிரியை (செயல்) போல் ஆகாது என்றும் ஸ்ரீஸ்வாமிஜி சொல்வார்கள். உத்தம பக்தனின் சரீரமே காலப்போக்கில், அன்பு மயமாகவே மாறி விடுகின்றது என ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் சொல்வாராம். பகவானையே நினைந்து உருகி கொண்டிருக்கும் அன்பு மயமான பக்தனின் ஹிருதயத்தில், புதிது புதிதாக ஏற்படும் பாவானுபவங்கள் மிகவும் லலிதமாக, இனிமையாக, ரசனை மிக்கதாக, குளுமையான சந்திரன் போல, என்றும் புது அழகுடன் ஜொலிப்பதாக இருக்கும். அந்த நிலை வேறு எதனுடனும் ஒப்பிட இயலாததே. சடங்கு போல திரும்ப திரும்ப செய்யப்படும் ஒரு செயலல்ல அது என்று புரிந்து கொண்டாலும் சரிதான்.

பல வர்ணங்கள் உள்ள பலவிதமான ஆடைகளை உடுக்கிறோம். அதில் பல Pattern உண்டு அல்லவா! எத்தனை விதமான ஆபரணங்கள், அணிகலன்கள் அணிகிறோம். வாழ்க்கைமுறைகளும் அநேகம் அல்லவா! எல்லாம் உலகில் எவ்வளவு விதம் விதம். அதற்கு கணக்கே இல்லை அல்லவா? எல்லாம் ஒரே மாதிரி இல்லாமல் மாறிக்கொண்டே இருக்கின்றனவே! அதுபோல தன் இஷ்டதெய்வத்தை பக்தர்கள் கொண்டாடுவதும், துதிப்பதும், அலங்கரித்து அழகு பார்ப்பதும், ஒவ்வொரு முறையும் புதுவிதமாக இருக்கும். அடியார்களின் மனதில் பொங்கி பொங்கி வரும் பாவரசங்கள், அதில் வெளிப்படும். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ப்ரேமிகவரதனை கொண்டாடுவதும் அப்படித்தான் இருக்கும்.

ஒருமுறை கோபாஷ்டமி உற்சவம். தீபாவளியில் இருந்து எட்டாம் நாள்தான், கோகுல கண்ணன் தன் ஒருவனையே கதி என்று அண்டிய தன் குலத்தினரை

இந்திரன் பெய்த மழையிலிருந்து கோவர்தனத்தை குடையாய் ஏந்தி காத்த கண்ணனுக்கு, இந்திரன், 'கோவிந்தன்' என்று பட்டாபிஷேகம் செய்த தினம். அதுவே கோபாஷ்டமி. அது சமயம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், உன்னத பாவநிலையிலேயே இருந்தார்கள். அப்பொழுது, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்கு ஆஸ்ரமமே பொன்மயமாக காட்சி அளித்தது. அந்த இடமே கோகுலமாக தோன்றிற்று. உடனிருந்த அன்பர்களிடம் எல்லாம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், "இதோ! நம் பிரேமிகவரதன் நந்தபாபாவிடம் சொல்லி பூஜையை நிறுத்தி விட்டு, எல்லாம் கோவர்தனத்துக்கு கொடுத்து விட்டானே! இந்திரனுக்கு கோபம் வந்து விட்டது. பிரளய கால மேகங்களை அனுப்பி மழையை பொழிய வைக்கிறான். பாவம் கோப கோபிகைகள். அங்கு நந்தபாபாவின் வீட்டு திண்ணையில் தக்ஷிணாமூர்த்தி போல கண்ணன் அமர்ந்திருக்கிறான். அவன் முன் கோபர்கள் அடைக்கலமாக நடுங்கி கொண்டு வந்து நிற்கின்றனர். மழை கொட்டி தள்ளுகிறது. வானத்தை பார்த்து கொண்டே இருக்கிறார்கள். அப்பொழுது கருணைக்கடலான கண்ணன் கோவர்த்தனத்தை தூக்கி விட்டான். நாம் அனைவரும் கோவர்தனத்தின் கீழ்தான் இருக்கிறோம்" என்றார்கள்.

கல்லாலும் மண்ணாலும் ஆன கட்டிடம் தெரியாமல், அவருக்கு, பிரேமிகவரதன் கோவர்தனம் தூக்கி கொண்டு நிற்பதாக தோன்றியது. அவனை மகிழ்விக்க அவன் நாமம்தானே தேவை? அனைத்து ஊர்களில் இருந்தும் அன்பர்களை வரவழைத்து ஏழுநாட்கள் அகண்டமாய் மஹாமந்திர நாம மழையை கீர்த்தனம் செய்வித்தார்கள். எட்டாம் நாள், "இதோ இந்திரன் வந்து விட்டானே! ஐராவதம் காமதேனுவுடன் வந்துவிட்டானே!" என்றார்கள். எல்லாம் அவருக்கு நேரில் நடந்து கொண்டு இருப்பதாகவே சொல்லி கொண்டு இருந்தார்கள். பாடசாலை மாணாக்கர்களை இந்திரனும், தேவர்களும் போல வேடம் தரித்து வர செய்து, ஸ்ரீஸ்வாமிஜி ப்ரேமிகவரதனை காமதேனு ஐராவதம் சஹிதமாக இந்திரன் செய்வித்தது போல, 'கோவிந்த' பட்டாபிஷேகம் செய்வித்து மகிழ்ந்தார்கள். அதற்கு முன்பு, எந்த வருடமும், அவர் அப்படி கொண்டாடவில்லை. அடுத்த வருடங்களில் அது வேறு விதமாக இருந்தது!

ஸ்ரீஸ்வாமிஜி எத்தனையோ முறை பாகவதம், ராமாயணம், பக்த சரித்திரங்கள் எல்லாம் பல இடங்களில் எடுத்து சொல்லி இருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு முறை அதை கேட்கும்போதும், அது புதிதாக கேட்பதாகவே இருக்கும். கதை ஒன்றுதான். ஆனால் அதில் வரும் விஷயங்கள், சம்பவங்களின் கோர்வை, அவரது பார்வை எல்லாவற்றிலும் ஏதாவது புதிது இருக்கும். கேட்பவருக்கு புதிது மட்டுமல்ல, கதையை அன்று நடப்பது போலவே ஒவ்வொருமுறையும் உத்சாஹத்துடன் சொல்வார்கள்.

கண்ணன் பிறந்ததை கோகுலாஷ்டமி என கொண்டாடுவது போல, அதற்கு அடுத்த அஷ்டமியில், ராதை பிறந்த தினம், ராதாஷ்டமியாக கொண்டாடப்படுகிறது. ராதையின் பிறந்த இடமான பர்ஷானாவில், இது கோலாஹலமாக கொண்டாடப்படும். மதுரபுரி ஆஸ்ரமத்திலும் ஸ்ரீஸ்வாமிஜி, கடந்த 21ஆம் தேதி மிக விமரிசையாக ராதாஷ்டமியை கொண்டாடினார்கள். அதற்கு சில நாட்கள் முன்பிருந்தே, அவர் ராதையின் நினைவிலேயே இருந்தார். ராதையின் நாமத்தை சொல்லி கொண்டே இருந்தார்.

காலையில், நமது ஸ்ரீ மாதுரி ஸகி ஸமேத ஸ்ரீப்ரேமிக வரதனுக்கு விமரிசையாக திருமஞ்சனம் நடந்து முடிந்த தருணம்! நமது ஸாந்தீபனி வேதபாடசாலை அத்யாபகர் ப்ரும்மஸ்ரீ சிவராம சர்மா அவர்கள், தனது சின்னஞ்சிறு பெண் குழந்தையை ஸ்ரீஸ்வாமிஜியின் தரிசனத்திற்காக அழைத்து வந்தார். அந்த அழகிய பாலைக்கு, ‘விசித்ரா’ என்று நமது சத்குருநாதரே பெயர் சூட்டி இருந்தார். அந்த குழந்தையை முதன்முதலாக, ஸ்ரீஸ்வாமிஜியின் சந்நிதியில் அழைத்து வந்தனர் பெற்றோர்! பட்டுப்பாவாடை அணிந்த அந்த அழகிய குழந்தை, ஸ்ரீஸ்வாமிஜியை வந்தடைந்தது. குழந்தையைப் பார்த்த ஸ்ரீஸ்வாமிஜியின் தாமரை முகம் மலர்ந்தது! ‘குட்டி ராதை வந்துருக்காடா’ என்று ப்ரேமை ததும்பும் மெல்லிய குரல், அருகில் இருந்தோரின் இதயத்தில் இனிதே கேட்டது! அப்பொழுது ராதை பாவத்தில் இருந்த ஸ்ரீஸ்வாமிஜிக்கு, தன் கரங்களில் சின்னஞ்சிறு தளிர் போன்ற ராதைதான் தெரிந்தாள்! மலர்ந்த திருமுகத்தில், ஒரு தேனினும் இனிய பாடலும் மலர்ந்தது! அந்த குழந்தையை பார்த்தவாறே

கையை மெதுவாக தாலாட்டுவதை போன்ற மெல்லிய அசைவோடு, மெல்லிய இசையும் மலர்ந்தது! ‘வ்ருஷபானு குமாரி ஜோ ஜோ! பர்ஷானா ராணி ... விசித்ர ராதா தேவியே ஜோ ஜோ!!’ என்ற வாத்ஸல்ய பாவத்தில், "விசித்ரா" என குழந்தையின் பெயர் வருமாறு, இந்த அழகிய கீர்த்தனத்தை அன்று ஸ்ரீஸ்வாமிஜி அருளினார். கண்ணிற்கும் செவிகளுக்கும் இது தெவிட்டாத விருந்தாக இருந்தது என்பதை, சொல்லவும் வேண்டுமோ?

மாலை புறப்பாடும் உத்ஸவமும் ஏற்பாடாகி இருந்தது. ஆனால், அவர் மனது என்னவோ பர்சானாவில் இருப்பது போல அவர் இருந்தார். கண்ணன் வீட்டிற்கு வருவதெனில் வெண்ணை அளர்ந்த பாதங்களை வரைவார்கள் அல்லவா! அதுபோல, குட்டி ராதையின் சிவந்த குஞ்சு பாதங்களை ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், பாகவத பவனத்தின் முனையில் இருந்து சன்னதி வரை அழகாக மிக தூய்மையான பளீரென்ற வெண்மையான வஸ்திரத்தில் வரைவித்தார்கள். அதை பார்க்க சிறுமி ராதை, தத்தி தத்தி மெல்ல மெல்ல நடந்து வந்தது போல இருந்தது! ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் நாவிலிருந்தோ, ராதே ராதே என்று ராதையின் நாமம் வந்து கொண்டே இருந்தது.

மாலையில், சத்சங்கத்தை சேர்ந்த ஏழெட்டு குட்டி குட்டி குழந்தைகள், பட்டு பாவாடை கட்டிக்கொண்டு, ஜிமிக்கி எல்லாம் போட்டவாறு வந்திருந்தனர். சட்டென அவர்களை பார்த்தவுடன், ஸ்ரீஸ்வாமிஜிக்கு அவர்கள்தான் ராதையின் அஷ்ட சகிகள் என தோன்றியது. அவர்களுக்கு காலில் நலங்கு இட சொல்லி, அவர்கள் ஒவ்வொருவர் கையிலும் வீணை, சத்ரம், சாமரம், குங்குமம், சந்தனம், தீபம், தம்புரா, மாலை என ஒவ்வொரு உபசாரத்தை கொடுத்து ப்ரேமிகவரதன் மாதுரீஸகி புறப்பாட்டிற்கு முன் வர செய்தார். அவர்களை, மாதுரிசகியுடன் பூப்பந்து விளையாட செய்தார்.

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களே, ராதையின் மேல் கீர்த்தனங்களை பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும், பலவிதமான சுகந்தம் வீசும் மல்லிகை, ரோஜா போன்ற

மலர்களை புஷ்பவர்ஷமாக பொழிந்து கொண்டிருந்தார்கள். இதை பார்க்கையில், மதுரபுரியே பர்ஷானா ஆகிவிட்டதாக தோன்றியது!

இவ்வருடம் ராதாஷ்டமி இப்படி இருந்தது என்றால், சென்ற வருடங்களில், ஒவ்வொரு முறையும், ஒவ்வொரு விதமாய் கொண்டாடினார்கள். ஒரு ராதாஷ்டமி தினம்; எதிரே அழகான கோட்டை; நீண்ட உறுதி வாய்ந்த கம்பீரமான மதில் சுவர்; மலை போன்ற உயரம்; அதன் மேலேயும் வெளியிலும் ஆஜானுபாகுவாய் உறுதியான தோள்களுடன் வீரர்கள் காவலில் இருந்தார்கள். மதில் மேலே, ராஜாங்க செய்திகளை கட்டளைகளை அறிவிப்பு செய்ய, பெரிய முரசு; பெரிய தீப்பந்தங்கள் ஒளியை பரப்பின; அப்பொழுது, ஒரு வீரன் வந்து ராதை பிறந்து விட்டாள் என முரசு கொட்டி அறிவிக்கிறான். பேரிகை முழங்குகிறது. பார்த்தால், அது பர்சானாவில் உள்ள வ்ருஷபானு ராஜாவின் அரண்மனை! இந்த பாவானுபவத்தில் இருக்கையில்தான், ..கொட்டு முரசே .. எங்கள் ராதை பிறந்தாள் என்று கொட்டு முரசே என்ற மதுரகீதத்தை ஸ்ரீஸ்வாமிஜி பாடினார்கள்.


இன்னொரு வருடம் ... இனிமையாக கூவும் குயில்கள் நிறைந்த பச்சை பசேலென்ற சோலை. துள்ளி குதித்து மான்கள் ஓடி ஓடி, ஆனந்தமாய் பொழுதை கழிக்கின்றன: அவற்றின் முகத்தில் பயமில்லை; பிரியம் வழிகிறதோ! மயில்கள் தோகை விரித்து ஆடுகின்றன. வானம் அப்படி ஒன்றும் கருக்கவில்லையே! ஏனிந்த களிப்பு அவைக்கு? பூச்செடிகளும் மரங்களும் தென்றல் காற்றில் இனிமையான படபடப்புடன் ஆடுகின்றனவே! நதி சலசலத்து ஓடுகிறது! ஆனால் ஏதோ ஒரு செய்தி சொல்லுகிறது! என்ன அது! அட! நான்முகரும் ஷண்முகரும் முக்கண்ணரும் உள்ள கோவில்களில், மணி காற்றிற்கு ஒத்தபடி அடிக்கின்றனவோ! மலைகளுக்கு உயிர் பிறந்து விட்டதோ! என்ன விந்தை இது! என்ன காரணம்! அதோ ஒரு சிறுமி! அவள் என்ன தேவலோகத்து பெண்ணா? கண்களிலிருந்து பார்வையை விலக்க முடியாத அளவு குளிர்ந்த காந்தி! பளீரென வெண்மையான பட்டா அது! அவள் ஓடினாள்; அதில் அவள்

குதூஹலத்துடன் இருக்கிறாள் என்பது தெரிந்தது. அவள் ஏதோ சொல்லிக்கொண்டே ஓடுகிறாள்! அதை கேட்டுத்தான் இந்த பிரபஞ்சம் இப்படி மாறி ஆடுகின்றது! என்ன அது? அப்படி பிறந்ததுதான் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் ராதை பிறந்தனளே .. எங்கள் ராதை பிறந்தனளே .. மயில்களே குயில்களே எங்கள் ராதை பிறந்தனளே .. என்ற கீர்த்தனம் ராதையுடன் ராதாஷ்டமியன்று பிறந்தது!

கண்ணன் பிறந்த அன்று அவனை பார்க்க வந்த பாட்டி அவனுக்கு அக்ஷதை போடாமல், தனக்கு போட்டு கொண்டாள் என ஸ்ரீஸ்வாமிஜி சொல்வார்கள். காரணம் "இவன் ஒரு விசித்திரமான தெய்வ குழந்தை. இவன் நிச்சயமாக எண்ணற்ற லீலைகளை செய்யத்தான் போகிறான்; அதை பார்த்து ரசிப்பதற்கு ஆயுள் எனக்கு இருக்க வேண்டும்" என குழந்தை தலையில் போடாமல், தன் தலையில் அக்ஷதை போட்டு கொண்டாள் என்பார்.

அப்படித்தான், ராதாஷ்டமியை ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கொண்டாடியதை அனுபவித்த பாக்யசாலிகள் எல்லோர் மனதிலும் அன்றிரவு ஆஸ்ரமத்தில் இருந்து கிளம்பும்பொழுது, ஒரே பிரார்த்தனைதான். இப்படி ஒவ்வொரு வருடம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் நவநவமாக கொண்டாடிக்கொண்டு இருக்க போகிறார். அதை தரிசித்து, அனுபவிக்கும் பாக்யம் நமக்கு இருக்கட்டும் என்பதுதான் அந்த பிரார்த்தனை!

எப்பொழுதும் நம் மனதில் ஆதாரமான ஸ்ருதி போல 'நான்' 'நான்' என்ற எண்ணம், ஸதா ஸ்புரித்து கொண்டே இருக்கின்றது. அந்த எண்ணத்திற்கு எப்பொழுதும் உலகமும் பிறரும் தன்னை கவனிக்க வேண்டும் என்பதற்காகவே, ஏதாவது யுக்திகளை செய்து கொண்டிருக்கும். அது அப்படி பிறரும் உலகமும், தன்னை கவனிக்க வேண்டும் என்பதற்காக, யுக்திகளை கைவிட்டு விட்டு, தன்னையே கவனிக்க வேண்டும். இதுவே ஞான சாதனம். -மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

**கேள்வி: சித்தர்கள், முக்தர்கள், பக்தர்கள் இவர்கள் யார்?**

பதில்: மூவரும் சாதுக்களே. சித்தர்கள் யோக பயிற்சியால் சகுண உபாசனை செய்து, எட்டு மஹா சித்திகளை பெற்று, சகுணத்தை சாக்ஷாத்கரித்து, அந்த சித்திகளை வெளியில் காட்டிகொள்ளாமல், சீடர்களின்பால் உள்ள கருணையால் அவ்வப்போது சித்திகளை காட்டவும் செய்கிறார்கள். அவர்களால் எந்த இடத்திலும் எப்பொழுது வேண்டுமானாலும் தோன்றவோ மறையவோ முடியும். இது போன்று லஹிமா, கரிமா, போன்ற பல தெய்வீக சித்திகளும் இவர்களின் வசம்! சித்திகளை பேருக்காகவோ, புகழுக்காகவோ சுயநலத்திற்காகவோ வெளியிடாமல், சீடர்கள் மீதுள்ள கிருபையால், அவ்வப்போது மட்டுமே தானாக சித்திகள் வெளிவரும்! சமர்த்த ராமதாசர் இது போன்று, உலக நன்மைக்காக வாழ்ந்த சிறந்த சித்தர்களுள் ஒருவராவார்.

முக்தர்கள் ஆத்மஞானிகளாவர்; ப்ரஹ்ம நிஷ்டர்கள் இவர்கள். இவர்கள் அனுக்ரஹம், நிக்ரஹம் போன்றவைகளை கடந்தவர்கள். எண்ணங்கள், உணர்ச்சிகளை எல்லாம் தாண்டி இருப்பவர்கள். எங்கும் எதிலும் வாசுதேவனையே பார்ப்பார்கள். எதிலும் பேதம் பார்க்காமல், ப்ரஹ்மமாகவே ஆகி இருப்பவர்கள். இவர்கள் எந்த சங்கல்பமும் இல்லாமல், நடப்பவைகளை சாக்ஷி மாத்திரமாக பார்த்துக்கொண்டு இருப்பார்கள். ஸ்ரீ சுகர், ஸ்ரீ ரமண மகர்ஷி, ஜடபரதர் போன்றவர்கள் இப்படிப்பட்ட ஞானிகளாவர்.

பக்தர்களோ, சகுண பகவான் மீது மாறாத அன்பு பூண்டு, பிரேமையாலேயே சமாதி கைகூடி, சீதம் உஷ்ணம், மானம் அவமானம் எல்லாவற்றையும் தாண்டி இருக்கும் ஞான நிலையில் இருந்து, சதா இறை ஸ்மரணத்திலும், கீர்த்தனத்திலும்,

கதைகளிலுமே காலத்தை கழித்து வருவார்கள். இவர்கள், கஷ்டங்கள் போவதற்கோ, இஷ்டங்கள் கைகூடுவதற்கோ, மோக்ஷத்திற்காக கூட பக்தி செய்யாமல், ஞான நிலையில் இருந்துகொண்டு, பகவான் மீதுள்ள அன்பினால் மட்டுமே பக்தி செய்வார்கள். இவர்களின் யோக க்ஷேமங்களை பகவானே வரிப்பதாக, பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணன் உறுதி அளிக்கிறான்! நாமதேவர், துக்காராம் போன்றவர்கள் இப்படிப்பட்ட சிறந்த பக்தர்களாவர்.

## சனாதனப்புதிர் பகுதி 78 - விடைகள் -ஆத்ரேயன்

1. க்ருஷ்ண பரமாத்மா ப்ரலம்பனை கொன்றார். இவன் கம்சனுடைய நண்பன்.
2. ப்ரதீபன் - சுனந்தாவின் புத்ரன்; தேவாபி சாந்தனுவின் சகோதரன்; சோமதத்தன் பிள்ளை; பூரிஸ்ரவா பேரன்.
3. ப்ரஹஸ்பதியின் தம்பியான உதத்யயனின் மனைவி. தீர்க்கதமா ருஷி, உதத்யன் - மமதாவின் பிள்ளை.
4. மமதா கர்ப்பவதியாக இருந்தாள். தீர்க்கதமா கர்ப்பத்தில் இருந்தது. ப்ரஹஸ்பதி கெட்ட நோக்கத்துடன் மமதாவை அணுக கர்ப்பத்தில் இருந்த தீர்க்கதமா, ப்ரஹஸ்பதியை நன்கு அடித்து துரத்தியது. கோபம் கொண்ட ப்ரஹஸ்பதி குருடனாய் இருக்க கடவாய் என்று தீர்க்கதமாவிற்கு சாபம் இட்டார்.
5. அகஸ்தியர், வசிஷ்டர்.
6. நாராயணி தேவசேனா; துர்வாசர் இவருடைய ஆஸ்ரமத்திற்கு வந்து 6பர்வாக்கள் எல்லா உணவையும் சாப்பிட்டு விட்டு, மீதியையும் உடலில் பூசி கொண்டார். முத்கலரும் அவரது குடும்பத்தினரும் 6பர்வாக்கள் பட்டினியாக இருந்தனர். இதை கண்ட துர்வாசர் முத்கலரை போற்றி அவர் பெருமையை உலகிற்கு தெரிவித்தார்.
7. குமோர்ணா.
8. வஸுக்களில் முக்யமானவர். இவர்கள் மனிதர்களாக பிறக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நந்தகோபர்-யசோதா என்று மானுட பிறவி எடுத்தனர். ஸ்ரீகிருஷ்ணர் இவர்களிடம் வளர்ந்தார்.
9. மனைவி - கௌரி; புதல்வன் - மாந்தாதா; தந்தை - ப்ரசேனஜித்; புதல்வி - காவேரி(நதி).
10. சாருமதி.



# பாகவத பழம்

## ஸ்கந்தம் 2, அத்யாயம் 10

–ஸ்ரீ ஸ்வாமிஜி

(29)



"பரீக்ஷித்!, நாரதர் தனது சந்தோஷமடைந்த தந்தையான பிரம்மாவிடம், நீ என்னிடம் கேட்ட கேள்விகளையே கேட்டார்" என்றார் சுகர்.

"அப்பொழுது பிரம்மா, பகவானால் தனக்கு உபதேசிக்கப்பட்ட இந்த பத்து லக்ஷணங்களையுடைய பாகவதத்தை, நாரதருக்கு உபதேசித்தார். நீ என்னிடம் கேட்ட எல்லா கேள்விகளுக்கும், அதற்கும் மேலுள்ளவற்றிற்கும் முழுவதுமாக, பதில் அதில் இருப்பதால், அதை உனக்கு இப்பொழுது சொல்லப் போகின்றேன்" என்றார் சுகர்.

### பத்தாவது அத்யாயம்

பாகவதத்தைப் பற்றி மேலும் ஸ்ரீ சுகர் பரீக்ஷித்திடம் கூறுகிறார்.

*அத்ர ஸர்கோ விஸர்கஸ்ச ஸ்தானம் போஷணமூதய:*
*மந்வந்தரேசானுகதா நிரோதோ முக்திராஸ்ரய:* 2.10.1
*தசமஸ்ய விஸுத்த்யர்த்தம் நவானாமிஹ லக்ஷணம்*
*வர்ணயந்தி மஹாத்யான: ஸ்ருதேநார்த்தேன சாஞ்ஜஸா* 2.10.2

இந்த ஸ்ரீமத் பாகவதம், பத்து லக்ஷணங்களைக் கொண்டது. ஸர்கம், விஸர்கம், ஸ்தானம், போஷணம், ஊதிகள், மன்வந்தரம், ஈஷானுகதா, நிரோதம், முக்தி மற்றும் ஆச்ரயம் என்ற பத்து விஷயங்கள் இதில் உள்ளது.

மஹான்களோ இதில் முதல் ஒன்பது, பத்தாவதான ஆச்ரயத்தை தெளிவுறச் செய்யவே உள்ளன என அபிப்ராயப்படுகிறார்கள்.

பாகவதத்தில் வரும் ஸ்துதிகளின் நேரான அர்த்ததிலிருந்தோ அல்லது சுலோகங்களின் தாத்பர்யத்திலிருந்தோ இந்த முடிவுக்கு மஹான்கள் வந்துள்ளனர்.

பஞ்ச மஹாபூதங்கள், அவைகளின் தன்மாத்திரைகள், காது முதலிய இந்திரியங்கள், மஹத், அஹங்காரம் இவை அனைத்தும் பரமாத்மாவிடமிருந்து நேரில் உண்டானதை 'ஸர்கம்' என்று கூறுவர். பிரம்மாவால் செய்யப்படும் சராசர சிருஷ்டி 'விஸர்கம்' என்று கூறப்படுகிறது. பகவானின் வெற்றியே 'ஸ்தானம்' என்று கூறப்படுகிறது. பகவானுக்கு என்ன வெற்றி? அவனது சிருஷ்டியில் உள்ள அனைத்தும் கட்டுப்பாட்டில் உள்ளன என்பதே பகவானுக்கு வெற்றி. பகவானுக்கு தன் பக்தர்களிடம் இருக்கும் பரிவும் அனுக்ரஹமும் 'போஷணம்' என்று கூறப்படுகிறது. ஜீவன்களின் பந்தத்திற்கு காரணமாயுள்ள, கர்ம வாசனைகளே 'ஊதிகள்' எனப்படுகின்றன.

அந்த அந்த மன்வந்தரங்களில், அந்த அந்த மனுக்கள் கடைப்பிடித்த தர்மங்களை 'மன்வந்தரம்' என கூறுவர். ஸ்ரீஹரியின் அவதார சரித்திரங்கள் மற்றும் அவருடைய பக்தர்களின் பலவிதமான கதைகள், 'ஈசகதைகள்' என அறியப்படுகின்றன. ஸ்ரீஹரியினுடைய யோக நித்திரைக்குப் பின், அதாவது பிரளயகாலத்தில், உபாதிகளுடன் கூடிய ஜீவனுக்கு ஏற்படும் லயம், 'நிரோதம்' எனப்படுகிறது. 'முக்தி' என்பது அந்த ஜீவன் பொய்யாக ஆரோப்பிக்கப்பட்டிருக்கும் கர்த்ருத்வம் முதலிய--வற்றை விட்டுவிட்டு, தனது நிஜ ஸ்வரூபத்தில் (பிரம்மமாக) இருப்பதுதான்.

சிருஷ்டி, ஸ்திதி, லயம் எதிலிருந்து உண்டாகிறதோ அதுவே 'ஆச்ரயம்'. பரப்ரம்மம் என்றும் பரமாத்மா என்றும் இந்த ஆச்ரயத்தையே சாத்திரங்கள் கூறுகின்றன. அதனால், பகவானே ஆச்ரயம் என அறிய வேண்டும். ஏனென்றால், பிறரை ஆச்ரயிக்காமல் தனக்கு தானே ஆச்ரயமாக இருந்து கொண்டு இவர் மற்றவைகளுக்கும் ஆச்ரயமாக இருக்கிறார்.'

இவ்வாறு பாகவதத்தின் பத்து லக்ஷணங்களை விளக்கிய பின் ஸ்ரீசுகர், நாராயணன் நாமம் வந்த காரணத்தைக் கூறுகின்றார்.

பிரம்மாண்டத்தை பிளந்து கொண்டு, வெளியே வந்த அந்த புருஷன், தான் வஸிப்பதற்கு இடத்தை விரும்பி, சுத்தமான கர்போதகம் எனும் ஜலத்தை சிருஷ்டித்தார். இந்த ஜலத்தில் அவர் ஆயிரம் முழு வருடங்கள் வசித்தார். நரன் இடமிருந்து உண்டானதால், அந்த காரணோதகத்திற்கு நாரம் என்ற பெயரும், அதில் வீற்றிருந்த பகவானுக்கு நாராயணன் என்றும் பெயர் ஏற்பட்டது. இந்த பகவானின் அனுக்ரஹத்தினாலேயே திரவ்யம், கர்மம், காலம், ஸ்பாவம், ஜீவன் போன்றவை, அது அதன் காரியத்தைச் செய்ய சக்தியுள்ளவைகளாகின்றன. அவர் உபேக்ஷித்தால், இவை அனைத்தும் சக்தியற்றவையாக போய்விடுகின்றன.

இதன் பின் ஸ்ரீசுகர், மீண்டும் விராட் புருஷன் தோன்றுவதை வர்ணிக்கிறார்.

ஒருவராக இருந்த அந்த பரமாத்மா, பலவாக இருக்கும் தன்மையை விரும்பியவராய், யோக நித்திரையிலிருந்து எழுந்து தனது கர்பரூபமான தேஹத்தை, அதிதெய்வம், அத்யாத்மம், அதிபூதம் என்ற மூன்று விதமாக பிரித்தார். இதன் பின் ஸ்ரீசுகர், அந்த விராட்புருஷனுக்கு உண்டான இந்திரியங்கள், அதற்குரிய தேவதைகள், மற்றும் அதன் தன்மைகளைக் கூறுகிறார்.

அந்த விராட் புருஷனின் சரீரத்தினுள் இருக்கும் ஆகாசத்திலிருந்து, ஓஜஸ் என்று சொல்லக்கூடிய இந்திரிய சக்தியும், ஸஹ: எனப்படும் மனோ சக்தியும், பலம் என்ற தேஹ சக்தியும் உண்டாயிற்று. அவரிடமிருந்து எல்லா ப்ராணியின் முக்ய பிராணன் உண்டாயிற்று. அந்த விராட் புருஷனுக்கு, பசி, தாகம் எடுத்தபோது, அவருக்கு வாய் தோன்றியது. அதில் நாக்கு என்ற இந்திரியமும் தோன்றியது. நாக்கிற்கு விஷயமான ரஸமும் தோன்றியது. பேச விரும்பிய அவருக்கு, அவரது வாயிலிருந்து அக்னி தேவதை, வாக்கு என்ற இந்திரியமும் மற்றும் சப்தமும் உண்டாயிற்று. ஜலத்தின் உள்ளேயே வாழ்ந்த அவர், மூச்சு விட விரும்பியபோது நாசிகள், அதன் தேவதையான வாயு மற்றும் கிராநேந்திரியம் உண்டாயிற்று. அவருக்கு பார்க்க வேண்டும் என்ற விருப்பம் வந்தபோது, இரண்டு கண்களும், அதன்

தேவதையான சூரியனும், சக்ஷுரிந்திரியமும் உண்டாயின. வேதங்கள் தனக்கு செய்யும் துதியை கேட்க விரும்பிய அவருக்கு இரு காதுகளும், ச்ரோத்ரேந்திரியமும், அதற்கு தேவதையான திக்குகளும் தோன்றின. உணர விரும்பிய அவருக்கு, தோல் உண்டாயிற்று. அதில் ரோமங்கள் என்ற இந்திரியமும், விருக்ஷங்கள் என்ற தேவதையும் உண்டாயின. பல வேலைகளைச் செய்ய விரும்பிய அவருக்கு, இரண்டு கைகளும், பலமும், அதன் தேவதையான இந்திரனும் உண்டாயின.

(கனியும்)

**சேங்கனூர் ஸ்ரீ ஸ்ரீனிவாச பெருமாள் கோவில் மஹா சம்ப்ரோக்ஷணம் 2.11.2015 திங்கட்கிழமை அன்று காலை 9.45 முதல் - 10.15க்குள் நடைபெறும்.**


**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes
Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,
R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.
(Next to Krishnamachari Yogamandiram)
Tel: 2495 0090Mob: 94458 80090
E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com
www.chennaiendocrine.com

# ஸ்ரீப்ரேமிக ஜன்மஸ்தான்

சென்ற வருடம் நமது சத்குருநாதரின் ஜன்மபூமியான சேங்கனூரில், சத்சங்கம் தொடர்ந்து நடைபெறுவதற்காக ஸ்ரீப்ரேமிக ஜன்மஸ்தான், குருவருளால் நிர்மாணிக்கப்பட்டது.

ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள், சென்ற வருடம் செப்டம்பர் **7, 2014** அன்று, ஜன்மஸ்தானில் பொன்னடி சாற்றி திறந்து வைத்தார்கள். இந்த வருடம், ஸ்ரீப்ரேமிக ஜயந்தி ஆகஸ்டு **30, 2015** அன்று, ஸ்ரீ ஸ்ரீ அண்ணா - ஸ்ரீ மன்னி அவர்களுடைய திவ்ய மங்கள அர்ச்சாவதார திருமேனி, அழகான கண்ணாடி அறையில் பிரதிஷ்டை செய்யப்பட்டு, நித்ய திருஆராதனம் நடைபெற்று வருகிறது. ஸ்ரீஸ்வாமிஜியின் நித்ய ஆராதனையில் இருக்கும் ஸ்ரீபாதுகைகள், சேங்கனூர் ஜன்மஸ்தானில் எழுந்தருள செய்யப்பட்டுள்ளது.

அதனோடு மட்டுமல்லாமல், பகவானுக்கு நடப்பது போல பிரதி வருடமும் கீர்த்தனாவளி, யுகள சதகம், ராதிகா சதகம், கோவிந்த சதகம் போன்ற சதகங்களும் பாடப்பட்டு, உத்ஸவங்களும் நடத்த சத்குருநாதரின் கிருபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வருடம், நமது சத்குருநாதரின் ஜெயந்தி செப்டம்பர் **5** அன்று, மங்கள வாத்யங்கள், நாமசங்கீர்த்தனத்துடன் ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவின் பாதுகைகளை ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள் அணிந்து கொள்ள, ஸ்வாமிஜி பூஜை செய்து, அதை தொடர்ந்து ஸ்ரீபாதுகைகளின் புறப்பாடு சேங்கனூரில், நான்கு வீதிகளிலும் நேர்த்தியாக நடைபெற்றது. ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை, யானை மீது புறப்பாடு கண்டருளினார்கள்.

ஒவ்வொரு மாதமும், ஸ்ரீசத்குருநாதரின் திருநக்ஷத்ரமான ரோஹிணி நன்னாளன்று, காலை ஆயுஷ்ய ஹோமமும், ஆவஹந்தி ஹோமமும் மாலையில் ஸ்ரீபாதுகைகளின் புறப்பாடும், சத்குரு க்ருபையால் நடைபெற உள்ளது.

## Singapore Book of Recordsஇல்

## சிங்கப்பூர் நாமத்வார்!

சிங்கப்பூரின் பொன்விழா ஆண்டில், **6.9.2015** ஞாயிறு அன்று சிங்கப்பூர் நாமத்வார் அன்பர்கள், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடன், வார்லி எனப்படும் ஓவிய தொகுப்பை வரைந்து **Singapore Book of Records**இல் இடம் பெற்றனர். வார்லி ஓவியம் என்பது, இந்தியாவில் **2500** நூற்றாண்டிற்கு முற்பட்ட பழங்குடியினரிடமிருந்து தோன்றிய ஒரு பாரம்பரியமிக்க ஓவியக்கலை ஆகும்.

இந்த ஓவிய தொகுப்பு, மக்கள் இசைக் கருவிகள் வாசித்து கொண்டு, ஆடிப்பாடி மகிழ்ச்சியாக துள்ளி நடனம் ஆடுவதை சித்தரித்து ஒற்றுமையையும் சகோதரத்வத்தையும் பிரதிபலிப்பதாய் அமைந்தது. **Shaking hands across Continents** என்பதை மையக்கருத்தாக இதற்கு ஸ்ரீஸ்வாமிஜி தந்திருந்தார்கள். பல இன, மத, மொழி வேற்றுமைகளை கொண்ட நாடாக இருந்தாலும், வேற்றுமையில் ஒற்றுமை - **Unity in Diversity** என்பதற்கு சான்றாக சிங்கப்பூர் திகழ்கிறது என்பதை இந்த ஓவியம் அழகாக எடுத்துக்காட்டியது. இந்த சாதனை தோ பாயோ சமூக மன்றத்தில் **6.9.2015** அன்று ஏழு மணி நேரம் நடந்தது. தாள்களில் சிறார்களால் வரையப்பட்ட ஒவ்வொரு நடன ஓவியத்தையும் சரியாக இணைத்து, அருமையான மிக பெரிய ஓவியம் கொண்டு வரப்பட்டது. **4** முதல் **13** வயதுள்ள கோபகுடீரத்தை சேர்ந்த **75**சிறுவர்கள் நாமத்வாரை சேர்ந்த **25** பெரியோர்களின் மேற்பார்வையில் **9.7 x 6.7** மீட்டர் **- 700**சதுர அடி அளவில் இதை நிகழ்த்தினர். இவ்வளவு சதுர அடியில் இத்தனை சிறார்கள் பங்கேற்று வரைந்த பெரிய வார்லி ஓவியம் இதுவே ஆகும். கலை மூலம் சகோதர ஒற்றுமையை காட்டி அனைவரின் மனதையும் தொட்ட இது, சிங்கப்பூர் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்திருக்கிறது. ஆறு மாத காலம் இதற்காக நாமத்வார் அன்பர்கள் பயிற்சி செய்து வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. நாமனைவரும் பெருமைப்பட வேண்டிய அருமையான செய்தி அன்றோ இது!

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**

# வீடு தேடி வருவான் விட்டலன் -20

## தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

### ஸ்ரீஞானேஸ்வரர்-9

புலி துரத்தியதால் குழந்தைகள் எல்லாம் பயந்தன. சோபான தேவரையும் முக்தாபாயையும் ஞானேஸ்வரரையும் கையில் பிடித்துக் கொண்டு, தப்பித்து ஓடினர் பெற்றோர்கள். நிவ்ருத்தி தேவர் மட்டும் கையை உதறி விட்டு, எங்கோ ஓடி போய் விட்டார். ஓடி ஓடி போன நிவ்ருத்தி தேவர், அருகில் இருந்த அஞ்சலி பர்வதத்தின் மேலுள்ள ஒரு குகைக்குள் ஒளிந்து கொண்டார். புலி துரத்தியதால் அப்பா அம்மா குழந்தைகளில் ஒரு குழந்தை தனியாக பிரிந்து போனது.

நிவ்ருத்தி தேவர் நுழைந்த குகையின் உள்ளே, ஒரு மஹான் அமர்ந்திருந்தார். அவர் வேறு யாருமல்ல! விட்டோபந்த் பிறப்பதற்கே யார் காரணமோ அந்த கைனிநாதர்தான். கைனிநாதரின் அருளால்தான் விட்டோபந்த் பிறந்தார். கைனிநாதர் பெரிய யோகீஸ்வரர். யோகத்திற்கே அதாரிட்டி (**authority**) என்று ஒருவரைக் குறிப்பிட்டால் அது மத்ஸ்யேந்திரர்தான். அந்த மத்ஸ்யேந்திரநாத்தின் சீடர் கோரக்நாதர். கோரக்நாதரின் சீடர் கைனிநாதர். இப்பொழுது கைனிநாதரின் சீடராகி விட்டார் நிவ்ருத்தி தேவர். இன்றைய கோரக்பூரை நிர்மாணித்தவரே, கைனிநாதரின் குருவான கோரக்நாதர்தான். அவருடைய தம்பியே கூட சிலகாலம் கோரக்பூரை ஆண்டார். கோரக்நாதர், பதஞ்சலி சொல்லி உள்ள அஷ்டாங்க யோகத்தை பற்றி பல நூல்கள் எழுதியுள்ளார். அதில் சில கிரந்தங்கள் இன்றும் கிடைக்கின்றன. யமம், நியமம், ஆஸனம், ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், தாரணை, தியானம், சமாதி என்ற எட்டு படிகளை கொண்ட இந்த யோகத்தைப் பற்றி அவர் விரிவாக பேசுகிறார்.

யம, நியமங்களுக்கு பின் வருவது ஆஸனம். மனதிற்கும் சரீரத்திற்கும் சம்பந்தம் உண்டு. அங்குமிங்கும் ஒருவர் அலைகிறார் என்றால், அவர் மனம் அலைபாய்கிறது என்று அர்த்தம். சரீரம் ஆடாமல் அசையாமல், ஒருவரால் ஒரு

ஆஸனத்தில் அமர்ந்து இருக்க முடிகிறது என்றால், அவர் மனது அடங்கி இருக்கிறது என்று அர்த்தம். மனதில் கவலை இருப்பவர்களால், ஒரே இடத்தில் உட்கார முடியாது. இதை எளிதாக உணர்த்த முடியும்.

ஆஸ்பத்திரியில் உறவினர் ஒருவருக்கு அறுவை சிகிச்சை என்று அழைத்து சென்றுள்ளனர்; ஆபரேஷன் தியேட்டர் வாசலில் ஆபரேஷன் செய்யப்படும் நபரின் உறவினர் பதட்டமுடன் இருப்பார். முன்னே பின்னே நடப்பார். கையில் ஏதாவது ஸ்வாமியின் படம் இருக்கும். அதைப் பார்த்து கண்களில் ஒற்றிக் கொள்வார். அவர் மனதில் கவலைகள் இருப்பதினால், அவர் படபடப்பு ஓயவே ஓயாது. ஆனால் ஒருவனுக்கு மனம் ஒருமுகப்பட்டு இருந்தால், அவன் சுலபமாக பல மணி நேரம் தியானத்தில் அமர்ந்து விடுவான். ஏனெனில், அவன் மனதில் கவலைகள் இல்லை. மனமோ அடங்கி விடுகிறது. மனது ஆடினால் சரீரம் ஆடுகிறது. மனது அடங்கி இருந்தால், சரீரம் அடங்கி இருக்கும். இதையே மாற்றி போட்டால், சரீரம் அடங்கி இருந்தால், மனதும் அடங்கி இருக்கும். அதைத்தான் பதஞ்சலி, 'மனது அடங்கா விட்டால் பரவாயில்லை; சரீரத்தை ஒரு ஆஸனத்தில் இருத்தி மணிக்கணக்காக ஆடாமல் அசையாமல் அமர்ந்திருக்க பழக வேண்டும். அப்பொழுது சலித்து சலித்து பழக்கப்பட்ட மனது தானாக அடங்க ஆரம்பிக்கும்' என சொன்னார். தமிழ் வேதாந்தத்தில் இதை, 'இந்தணல் இல்லா எரி மன்னி எங்ஙனம் தானே சாந்தி உறுமோ' என்பர். குடிசைகள் பல இருக்கிறது. ஒன்றில் நெருப்பு பற்றி கொண்டால் போதும். அந்த நெருப்பு அருகிலிருக்கும் குடிசைகளுக்கும் பரவி விடுகிறது. காற்று அதை பரப்பி விடுகிறது. ஆனால், அக்குடிசையை சுற்றி வேறு எந்த குடிசையும் இல்லாவிடில் அந்த குடிசை மட்டும்தான் எரியும். அந்த நெருப்பானது காற்றின் வழியாக பரவ முயலும். ஆனால் பற்றிக்கொள்ள ஒன்றும் இல்லாததால், தானே அணைந்து விடும். மனதிற்கு விஷயத்தை கொடுத்தால், அது அதை பிடித்துக் கொண்டு கிளம்பும்; அதிலிருந்து அடுத்தடுத்த விஷயம் என்று கிளம்பிக் கொண்டே இருக்கும். ஆனால் பிடித்துக் கொள்ள ஒரு விஷயமும் இல்லாவிடில் மனது தானே அடங்கிவிடும்.

(தொடரும்)

# ஸனாதன கோஸ்வாமி

7

- ஜனனி

ஸனாதனர் வ்ரஜத்தையடைந்து அங்குள்ள லீலாஸ்தலங்களை வெளிப்படுத்துவதில் ஈடுபடலானார். இங்கு அவர் பரம வைராக்கியத்துடன் த்யாகமயமான ஜீவனம் நடத்தி வந்தார். ஒரு பக்தரிடமிருந்து, மதுராமாஹாத்மியம் என்ற புஸ்தகத்தை பெற்றார். அதன் அடிப்படையில், வ்ரஜ மண்டலத்தில் முழுவதுமாக ஸஞ்சரித்து, அலைந்தலைந்து தீர்த்தங்களை கண்டுப்பிடிப்பதில், தீவிர முயற்சி எடுத்தார் ஸனாதனர். வீடுகளில் பிக்ஷை பெறுவதும், இரவுகளில் ஏதாவதொரு மரத்தடியில் வசிப்பார். இப்படியாக, தனது நாட்களை ப்ருந்தாவனத்தில் கழித்தார் ஸனாதனர்.

இப்படியாக லீலாஸ்தலங்களைத் தேடிக் கொண்டிருந்த ஸனாதனருக்கு, சில காலம் சென்றதும் ப்ரபுவையும் தனது சகோதரர்களையும் காண வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. தனது தம்பிகளை பற்றி அறிய அவர் நீலாச்சலத்தை நோக்கி சென்றார். சிறை அதிகாரிக்கு வாக்கு கொடுத்ததால், கௌட தேசம் வழியாக செல்லாமல், அவர் ப்ரயாக்-காசி வழியாக காட்டு பாதையில் நீலாச்சலத்தை நோக்கி செல்லலானார். காட்டு பாதையில் சில விஷ செடிகளின் காற்று இவர் மேல் பட்டதால், இவர் உடம்பில் அரிப்பும் கொப்புளங்களும் தோன்றின. பின் அதிலிருந்து சீழ் வேறு வழிய தொடங்கியது. மிகவும் கடுமையாக இந்த சரும வ்யாதி அவரை பாதித்தது. எதையுமே பொருட்படுத்தாமல் அவர் நடந்து நடந்து நீலாச்சலம் வந்தடைந்தார்.

நீலாசலத்தில் ப்ரபு கோவிலருகே வசிக்கிறார் என்று ஸனாதனர் கேள்விப்பட்டிருந்தார். தனது முன் வாழ்க்கையின் காரணமாக தன்னை கோவிலருகே செல்வதற்குக்கூட தகுதியற்றவராக ஸனாதனர் கருதினார். ஆதலால், அவர் ஹரிதாஸரின் குடிலை தேடி சென்றடைந்தார். ப்ரபுவை காண வேண்டும் என்ற தீவிர ஆசை இருந்தபோதிலும், கோவிலின்

அருகே செல்ல பயந்த ஸனாதனரை, ஹரிதாஸர், ‘பயம் வேண்டாம்! ப்ரபு தினமும் இங்கு வருவார். இதோ இப்பொழுது அவர் வரும் நேரம்தான்’ என்று ஆஸ்வாசப்படுத்தினார். அப்பொழுது, வெளியில் ஹரி நாம ஸங்கீர்த்தனம் கேட்டது. தூரத்தில் வந்து கொண்டிருந்த மஹாப்ரபுவை ஸாஷ்டாங்கமாக ஸேவித்தார் ஸனாதனர். ‘ஸனாதனன் எப்படி இங்கே?’ என்று கேட்டுக்கொண்டே ஓடி வந்து, அவரை வாரியணைத்து ஆலிங்கனம் செய்து கொண்டார் ப்ரபு.

ஸனாதனர், ‘ப்ரபு! நான் ஏற்கனவே நீசன். மேலும் உடம்பு முழுவதும் இந்த வ்யாதி வேறு வந்திருக்கிறது. தயவு செய்து என்னை தொடாதீர்கள்’ என்று ப்ரார்த்தித்தார்.

ப்ரபுவோ, ‘எனில் நான் இன்று தன்யனானேன். ஸனாதனரின் சிரங்குகளிலிருந்து வரும் திவ்ய கந்தத்தை முகர்ந்ததால் என்னுடைய இஹலோகம் - பரலோகம் இரண்டுமே மேன்மையடைந்தன’ என்றார். உண்மையிலேயே அந்த புண்களிலிருந்து, மஹாப்ரபு ஒரு திவ்ய கந்தத்தை உணர்ந்தார்.

ப்ரபு அங்கேயே ஒரு ஆஸனத்தில் அமர்ந்தார். ஸனாதனரும் ஹரிதாஸரும் கீழே அமர்ந்தார்கள். ப்ரபு ஸனாதனரிடம், ரூப் தன்னை வந்து சந்தித்த விஷயங்களை எல்லாம் கூறினார். அதே ப்ரஸங்கத்தில் அனூப், பரலோகம் சென்றுவிட்ட செய்தியையும் கூறினார். இந்த செய்தியை கேட்டதும், ஸனாதனரின் கண்களிலிருந்து தானாக ஜலம் வந்தது.

ப்ரபுவும் துக்கத்துடன் ம்ருதுவாக, ‘ஸனாதன்! உனது சகோதரன் நற்கதியை அடைந்துள்ளான். பரம பாகவதர்களின் உலகில் அவர் பரமானந்தத்தை அனுபவித்துக் கொண்டிருப்பார். லௌகீகமான எல்லாவற்றையும் த்யாகம் செய்து, வ்ரஜ மண்டலத்தில் ஸஞ்சரித்து, பின் குருவான தனது அண்ணா ரூபனின் மடியிலேயே கங்கை கரையில் ப்ராணனை த்யாகம் செய்த அனூப்பை விட பாக்யசாலி யார் இருக்க முடியும்? என்று கூறி ஆஸ்வாசப்படுத்தினார்.

(தொடரும்)

## சனாதனப்புதிர் பகுதி 78- <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

1. ப்ரலம்பனை கொன்றது யார்? இவர் யாருடைய நண்பன்?
2. பாஹ்லீகன் யார்? இவருடைய புதல்வன், பேரன் பெயர் என்ன?
3. மமதா இவர் யார்?
4. ப்ரஹஸ்பதி தீர்க்கதமாவிற்கு என்ன சாபம் கொடுத்தார்?
5. மித்ராவருணன், ஊர்வசிக்கு பிறந்த குழந்தைகள் யார்?
6. முத்கல மகரிஷி - இவரது மனைவியின் பெயர் என்ன? இவரது அன்னதானத்தை கண்டு பொறுக்காத துர்வாசர் என்ன செய்தார்?
7. யமனின் மனைவியின் பெயர் என்ன?
8. த்ரோண் மேலும் கரா இவர்கள் யார்?
9. யுவனாஸ்வன் - இவரது மனைவி, புதல்வன், புதல்வி, தந்தை பெயர் என்ன?
10. ஸ்ரீகிருஷ்ணன் - ருக்மிணியின் புதல்வியின் பெயர் என்ன?




75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com
www.buddiesinfotech.com

# பாலகர்களுக்கு ஒரு கதை



## குணம் நாடு!

ஆசிரியர் சங்கரன் வழக்கம் போல தனது கல்லூரி வகுப்பிற்குள் நுழைந்தார். கண்டிப்பும், கனிவும் கொண்ட அவர், தன் வகுப்பிலிருந்த மாணவன் ஒவ்வொருவரிடமும் ஒரு வெறும் பேப்பரை கொடுத்து கொண்டே வந்தார். எல்லோரிடமும் கொடுத்த பின், ‘‘எல்லோருக்கும் ஒரு சிறு **Surprise** சர்ப்ரைஸ் தேர்வு; கவனமாக இதை செய்ய வேண்டும்’’ என்றார்.

சங்கரனின் சுபாவம் அறிந்த மாணவர்கள் அனைவரும், அவர் மேற்கொண்டு என்ன சொல்ல போகிறார் என்று கவனமாயினர். அவர் தன் மேஜையில் இருந்த தாள்களை அடுக்கி கொண்டே, ‘‘உங்கள் ஒவ்வொருவரிடமும் கொடுக்க பட்டிருக்கும் பேப்பரின் மறுபக்கத்தை திருப்பி பாருங்கள்’’ என்றார். மாணவர்கள் அனைவரும் உடனே திருப்பி பார்த்தனர். பார்த்தால், அதில் ஒன்றும் இல்லை. ஒரே ஒரு கரும்புள்ளி மட்டுமே தாளின் நடுவில் இருந்தது. எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர். கேள்வி எதுவும் இல்லையே என அவர்கள் முணுமுணுக்க ஆரம்பிக்கவே, உரத்த குரலில் சங்கரன், ‘‘பேப்பரில் என்ன தெரிகிறதோ, அதை பார்த்து உங்களுக்கு என்ன தோன்றுகிறதோ, அதை அப்படியே எழுதுங்கள்’’ என்று தெளிவாக சொன்னார்.

மாணாக்கர்களுக்கு குழப்பம். ஆனாலும் ஆசிரியர் சொன்னதை செய்ய வேண்டுமே? அதனால் எல்லோரும் அதில் பதில் எழுதினர். சங்கரன் எல்லோரிடமும் பேப்பரை வாங்கி கொண்டார். ஒவ்வொருவர் எழுதியதையும் உரக்க படித்தார். அனைவருமே எதிர்பார்த்தபடி அந்த தாளின் நடுவே இருந்த கரும்புள்ளியை பற்றித்தான் எழுதி இருந்தனர். ஒரே ஒரு மாணவனை தவிர வேறு யாரும் அதில் வித்யாசப்படவில்லை.

பலர் அது நடுவில் இருக்கிறது, அது எவ்வளவு

பெரியது, அதன் கரு நிறம், இப்படி எழுதி இருந்தனர். ஆனால் அம்மாணவனோ ஒரு குழந்தையின் உருவத்தை லைன் ஆர்ட்டாக வரைந்து, அதில் அந்த புள்ளியை குழந்தையின் கன்னத்தில் வரும் ஒரு திருஷ்டி புள்ளியாக அமைத்திருந்தான். குழந்தையை வரைந்தது அழகா அல்லது குழந்தைக்கு திருஷ்டி பொட்டாக புள்ளியை வைத்தது அழகா என்று சொல்ல முடியாதது போல் அது அழகாய் இருந்தது. எல்லாவற்றையும் உரக்க படித்து முடித்த பின், சங்கரன் சிரித்த முகத்துடன், ‘‘நீங்கள் எழுதி இருப்பதை வைத்து யாரையும் நான் எடை போட போவதில்லை. ஒரு வாழ்க்கை பாடத்தை சொல்லவே இத்தேர்வை நடத்தினேன்’’ என்று நிறுத்தினார்.

மாணாக்கர்கள் அனைவரும் ஆர்வமாயினர். இதை பற்றி என்ன அவரால் சொல்லி விட முடியும் என்று இருந்தனர். சங்கரன், ‘‘வெள்ளையாக உள்ள முழு பக்கத்தில் ஒரு சிறு மையத்தில் கரும்புள்ளி இருக்கிறது. ஏன் ஒருவரும் பெரிய வெள்ளையான இடத்தை பற்றி எழுதவே இல்லை?’’.

‘‘கரும்புள்ளிதான் உங்கள் கவனத்தை கவர்ந்தது. பேப்பர் முழுக்க இருக்கும் முழு வெள்ளையை பார்க்கையில் அது என்னவோ மிக சிறியதுதானே. ஆனாலும் அதில்தான் நம் கவனம் செல்கிறது. அப்படித்தான் உலகிலும் பெரும்பாலானோர் வாழ்கிறோம்’’.

‘‘நான் ஒரு சம்பவத்தை படித்திருக்கிறேன். ஒரு ஜூடோ கற்று கொடுக்கும் ஆசானிடம், இடது கரம் இல்லாத ஒரு சீடன் பயிற்சி பெற வந்தான். அவனுக்கு ஒரே ஒரு மூவ் மட்டும் அந்த ஆசான் கற்று கொடுத்தார். அந்த சீடன் அதை மட்டுமே பழகினான். அவனை ஒருவருமே தோற்கடிக்க முடியவில்லை. அவனுக்கே ஆச்சரியம். தன் ஆசானை அணுகி, ‘‘அய்யா! எனக்கு மட்டும் ஏன் சண்டை பயிற்சியில் உள்ள மீதி நுணுக்கங்களை கற்று தர மறுக்கிறீர்கள்? ஆனாலும் என்னால் வெற்றி பெற முடிவது ஆச்சரியம்’ என்றான். ஆசான் சொன்னார், ‘உன்னை தோற்கடிப்பதற்கு எதிராளிக்கு ஒரே ஒரு மூவ்தான் இருக்கிறது. அது என்ன என்றால் உன், இடது கரத்தை அவன் பிடித்து உன்னை செயலிழக்க வைக்க வேண்டும். உனக்கு எது தடையோ, அதுவே உனக்கு பலமாக அமைந்து விட்டது’ என்றார்.

“அப்படி தடைகளை பலமாக மாற்றிக்கொள்ள, நல்ல வழிகாட்டியுடன் முயற்சி எடுக்க வேண்டும். இம்மாணவன் வரைந்துள்ள குழந்தை ஓவியம் அருமை. கரும்புள்ளியை குழந்தையின் கன்னத்தில் உள்ள புள்ளியாக அல்லவா மாற்றி விட்டான்?”

“மற்றொன்றையும் பாருங்கள்! பெரிய வெள்ளை தாள் போல நம் வாழ்வில் ஏராளமான நல்ல விஷயங்கள் இருக்கின்றன. அவற்றை பற்றி நாம் சிந்திப்பதில்லை. அருமையான பெற்றோர், நல்ல நண்பர்கள். உடன் பிறந்தார், நல்ல கல்விசாலை, அமைதியான சூழல், நல்ல வேலை, பெரும் கடல், பரந்த வானம், ஒளிரும் சூரியன், குளிரும் நிலா என எளிதாக காண கூடிய பல அதிசயங்கள், இனிமையான கீதம், வண்ண வண்ண செடிகள், ஆரோக்யமான உணவு என பல நல்ல விஷயங்கள் நமக்கு அமைகின்றன. அவற்றை பற்றி நாம் சிந்திக்கின்றோமா என்றால் இல்லை. இந்த உலக அனுபவத்தில் மிக மிக சிறிய அளவே ஆன சிறு சிறு உடல் உபாதைகள், சில பற்றாக்குறைகள், நண்பரிடமோ உறவினரிடமோ சிறு கருத்து வேறுபாடுகள் இப்படி சிற்சில விஷயங்களில் மனதை செலுத்தி நாம் நம் அமைதியை கெடுத்து கொள்கிறோம். எப்படி இறைவன் இதை அழகாக நமக்கு தந்திருக்கிறான். இதுதானே உண்மை?”.

மாணாக்கர்கள் கவனமாக கேட்டு கொண்டிருந்தனர். அவர் சொல்வது ஆழமாக மனதில் சென்று கொண்டிருந்தது கண்கூடாக தெரிந்தது. சங்கரன் தொடர்ந்தார், “வாழ்வில் கரும்புள்ளி போல சிறியதாக இருக்கும் தடைகளை கவனித்தாலும், அதற்கு அதிகம் கவனம் தராமல், வெள்ளை தாள் போல அதிகம் நன்மையாக கிடைத்திருப்பதை பற்றி அதிகம் சிந்தியுங்கள். தடைகளையே பலமாக மாற்றி கொள்ள முயலுங்கள். அதன்பின் நீங்கள் ஒளிமயமானவராக இருப்பீர்கள் என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை” என்றார்.

அதை கேட்ட மாணாக்கர்களின் மனதில்
*குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள்*
*மிகை நாடி மிக்க கொளல்*
என்ற குறள்தான் ஞாபகத்திற்கு வந்தது.

**செப்டம்பர் 5-14** - ஸ்ரீப்ரேமிகவரதனின் 22வது கோகுலாஷ்டமி உற்சவம் மிக சிறப்பாக மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. மிக அழகான அலங்காரம், இனிமையான கீதங்களுடன் புறப்பாடு, திவ்யநாம பஜனை, விசேஷ பூஜை எல்லாம் தினமும் இருந்தது. ஏராளமான அன்பர்கள் கலந்து கொண்டு குருவருளையும் திருவருளையும் பெற்றனர். விமரிசையாக அனைவருக்கும் மூன்று வேளையும் அன்னதானம் செய்யப்பட்டது. இசைப்பேரொளி சகோதரிகள் ஸ்ரீரஞ்சனி ஸ்ரீகாயத்ரி நிகுஞ்சோத்ஸவத்தில் கர்நாடக இசை வழங்கினர். ஈரோடு ஸ்ரீபாலாஜி பாகவதர் மிக அழகாக தினமும் உபன்யாசம் செய்தார். பத்து நாட்கள் சென்றதே தெரியாமல் விரைவாக ஆனந்தமாக அனைவருக்கும் சென்றது.

ராதாகல்யாணத்தன்று 'அன்பு பித்தன் ஹரநாதன் கடிதங்கள்' எனும் தமிழ் நூலை ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் வெளியிட, அதை பிரபல எழுத்தாளர் திரு.பி.சுவாமிநாதன் பெற்று கொண்டார். இந்நூல் திரு.ஹரகோபால் ஸேபூரி அவர்களால் எழுதப்பட்டு, திருமதி அனுராதா குமாரஸ்வாமி அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

**செப்டம்பர் 21** - ராதாஷ்டமி மதுரபுரி ஆஸ்ரமத்தில் கோலாஹலமாக கொண்டாடப்பட்டது.

**புராநவா** - GOD **இந்தியா சார்பாக புராநவா புதிர்போட்டி - ஆகஸ்ட் 31**இல் **தூத்துக்குடி**யில் 9மாவட்டங்களை சேர்ந்த 161பள்ளி மாணாக்கர்கள் பங்கேற்று இறுதி சுற்றில் 6பள்ளிகள் கலந்து கொண்டனர். திரு.சுதாகர் IBPIL தலைவர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். Dr.பாக்யநாதன்ஜி சிறப்பு உரை வழங்கி, மாணாக்கர்களுக்கு பரிசுகளும் வழங்கினார். அன்று மாலை தூத்துக்குடி நாமத்வாரில் பாக்யாஜி பேசிய மதுரஸ்மரணம் - ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திவ்ய சரித்திரத்தை திரளானவர்கள் வந்து கேட்டு ஆனந்தம் உற்றனர். **செப்டம்பர் 3** அன்று **பெங்களூர்** சீதாராம ஹாலில் நடந்த புராநவா போட்டியில் ஸ்ரீசாந்தீபனி குருகுல வேதபாடசாலை பிரின்சிபால் ப்ரும்மஸ்ரீபாலாஜி மற்றும் ராமானுஜம்ஜி கலந்து கொண்டனர். தூத்துக்குடி மற்றும் பெங்களூரு அன்பர்கள் அனைவரும் மிக சிறப்பாக பணியாற்றி இருந்தனர்.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



*- ஜனனி*

## *ஸ்ரீஸுபலதாஸ் பாபாஜி*-4

ஸ்ரீஸுபலதாஸ் பாபா, ராதாகுண்டம் அருகிலேயே குடிலமைத்து, 24 வருடங்கள் தொடர்ந்து, அந்த குடிலிலேயே ஏகாந்தமாக இருந்து கொண்டு பஜனை செய்தார்.

இக்காலத்தில் அவர் சூர்ய வெளிச்சத்தை கண்டாரா இல்லையா என்பது சந்தேகமே! சாதாரண மனிதர்கள் இவ்விதமான ஏகாந்த வாஸத்தை காராக்ரஹ வாஸத்திற்கு துல்யமாகவே எண்ணுவர். தன் ஸங்கல்பத்தால் ஒருவர் இவ்வளவு நீண்ட காலம் ஏகாந்தத்தில் இருக்கிறார் என்றால், அவருக்கு உள்முகமாக ஏதோ அனுபவம் உள்ளது என்று நன்கு விளங்குகிறது. அவருக்கு அந்தரங்மாக ஏற்பட்ட அனுபவங்களை சில சம்பவங்கள் வெளிக்காட்டுகின்றன.

ஒரு முறை காலை மூன்று மணிக்கு ஜயநிதாயிதாஸ் ஒரு ஸ்வப்னம் கண்டார். அதில் ஒரு பயங்கரமான பாம்பு பாபாவின் உடலை சுற்றிக்கொண்டு அவரை தீண்டுவதாகக் கண்டார். இதை கண்டதும், அவர் அலறிக் கொண்டே விழித்தெழுந்தார். பாபாவிற்கு ஏதாவது தீங்கு நேர்ந்திருக்குமோ என்று எண்ணி அவர் பதட்டத்துடன் பாபாவின் குடிலை அடைந்தார். ஒரு டார்ச்சின் வெளிச்சத்தால் ஜன்னல் வழியாக உள்ளே பார்க்கையில், பாபா அங்கு சலனமில்லாமல் அமர்ந்திருப்பது தெரிந்தது. அவரது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. ஜயநிதாயி 'ராதே ராதே' என்று கூறி பாபாவின் கவனத்தை தன்பால் ஈர்க்க முயன்றார். ஆனால் பாபாவிற்கோ வெளிப்ரக்ஞையே இல்லை.

ஜயநிதாயிதாஸ்பாபா செய்வதறியாது அழுதுகொண்டே நின்றுகொண்டிருந்தார். ஒன்றரை, இரண்டு மணி நேரம் கழிந்த பின் பாபாவிற்கு வெளியுணர்வு சற்று ஏற்பட்டது. அப்பொழுது அழுதுகொண்டே அவர் ஜயநிதாயிதாஸ் பாபாவைப் பார்த்தார். கையசைத்து அவரை போகும்படி ஸமிக்ஞை செய்தார். அவர் கை அசைப்பதை கண்டு பாபாவிற்கு தீங்கு ஒன்றும் ஏற்படவில்லை என்றெண்ணி, ப்ரஸன்னமாக தனது குடிலுக்கு திரும்பினார் ஜயநிதாயிதாஸ் பாபா.

மறுநாள் ஸாயங்காலம் அவருக்கு பாபாவை காண ஒரு வாய்ப்பு கிடைத்து.

அப்பொழுது பாபா, 'நீ கனவில் கண்டது உண்மையே. எனது மானஸிக ஸேவையில் பிழை ஏற்பட்டுவிட்டது. ப்ரியா-ப்ரியதமர்களின் லீலையைக் கண்டு மோஹித்த எனது கைகளிலிருந்து அக்தரின் குப்பி (அ) புட்டி (glass bottle) கீழே விழுந்துவிட்டது. ஸேவை செய்யமுடியாத துக்கத்தை எண்ணி எனது லீலா ஸ்மரணம் நின்றுவிட்டது. இதனால் ஏற்பட்ட விரஹமெனும் பாம்பு தீண்டியதால் நான் மரித்தவன் போல் ஆனேன். அப்பொழுது கருணாமயியான எனது ஸ்வாமினி தோன்றி, என்னை ஆஸ்வாஸப்படுத்தி எனது உயிரை காப்பாற்றினாள்' என்று கூறினார்.

பதேஹ்புர்ஸிக்ரியை சேர்ந்த ஸ்ரீஜானகிப்ரஸாத் என்பவர் பாபாவிடம் மிகவும் பக்தியாக இருப்பார். ஒரு முறை அவரோடு ஒரு ரயில் அதிகாரியும், 3-4 இளம்பெண்களும் வந்தனர். அழகாக ஆடை ஆபரணங்கள் அணிந்திருந்த அவர்களை கண்டு பாபா தன்னிலை இழந்தார். பெருமூச்சு விட்டுக்கொண்டே, அவர் புயலில் சிக்கிய வாழைமரம் போல் நடுங்கினார். ஜயநிதாயிதாஸ் உடனே, அவரை பிடித்துக் கொண்டார். இல்லாவிடில் பாபா தரையில் விழுந்து புரண்டிருப்பார்.

வந்திருந்த ரயில் அதிகாரி இந்த பாபாவிற்கு ஏதோ பேய் பிடித்துவிட்டது என்று எண்ணலானார். ஒரு அலௌகிகமான பாவத்தின் காரணத்தால்தான் பாபாவிற்கு இந்நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை, அவருக்கு புரிய வைக்க ஸ்ரீஜானகிப்ரஸாத் மிகவும் சிரமப்பட்டார்.

அவர்களெல்லாம் சென்றுவிட்ட பின்னும், வெகு நேரம் கழித்தே பாபா சாதாரண நிலைக்கு வந்தார். அப்பொழுது ஜயநிதாயிதாஸர் உற்சாகத்துடன், பாபாவின் பாவாவேசத்தின் காரணத்தைக் கேட்டார். பாபா, 'அந்த கன்னிகைகளை பார்த்ததும் எனக்கு ராதையின் ஸகிகள் மற்றும் ராதையின் நேர் ஸகிகளின் தாஸிகள்/ஸகிகள் - மஞ்சரிகளின் நினைவு தூண்டப்பட்டு விட்டது' என்றார்.

(தொடரும்)

# *மாலே மணிவண்ணா – 143*

–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்




*கடல் நிரை திரையில் கருநரையோடும்*
*சுடர்மதி கதிர் என தூ நரையோரும்*

கடல் அலை மேல் வரிசையாக தோன்றும் வெண்மை போல, கருமை பரவிய நரை மயிர் உடையவர்களாகிய பெண்கள். கடல் நீரின் நீலமும் அனல் பரப்பின் வெண்மையும் இடைவிட்டு தோன்றுதல் 30க்கு மேல் 50க்குள் நரைப்பருவத்து மகளிர் கூந்தலுக்கு உவமை; அவர்களை கருநரையோர் என்றார்.

ஒளி விடுகின்ற சந்திரனது கதிர்களை போல முழுவதும் வெண்மை நிறம் உடைய நரைமுது பெண்டிராய மகளிரும் (இவர்கள் 50வயதிற்கு மேற்பட்ட நரைமுது பெண்டிர் ஆவர்) சேர்ந்து வழிபட செல்கின்றனர்.

*மடையர் குடையர் புகையர் பூ ஏந்தி*
*இடை ஒழிவின்றி அடி உறையார் ஈண்டி* 45

இறைவனுக்கு உண்பிக்க கூடிய பொருள்களை உடையராய், (இவர்களை மடையர் என்றார்), குடை உடையவராய், தூபமூட்டி, தூபம் உடையவராய புகையராய், மலர்களை சுமந்தவராய், இடைவெளி இல்லாமல் தொடர்ந்து செல்கின்றனர்.

அடி உறையாராய் நெருங்கி செல்கின்றனர். (கையின்கண் கொடுக்க எடுத்து செல்கின்ற பொருளை கையுறை என்னும் வழக்கு போல, இறைவன் திருவடிக்கண் செலுத்தப்பெறும் பொருளை அடியுறை என்றார்).

*விளைந்தார் வினையின் விழுப்பயன் துய்க்கும்*
*துளங்கா விழுச்சீர்த் துறக்கப் புரையும்*
*இருகேழ் உத்தி அணிந்த எருத்தின்*
*வரைகெழு செல்வன் நகர்*

தம்மாற் செய்யப்பட்டு விளைந்து பொருந்திய வினையின் விழுமிய (சிறந்த) பயனை அனுபவிக்கும்

இடபமாகிய, சிறிதும் மாறுபடாத (அசையாத) பெரும்புகழை உடைய, சுவர்க்கத்தை (விண்ணுலகத்தை) ஒத்திருக்கும் திருக்கோயில்.

இரண்டு விதமான நிறம் அமைந்த புள்ளிகளை உடைய, அழகு பெற்ற படத்தினை உடைய, கழுத்தினை உடைய, கோடுகளை உடைய, உடம்பினை உடைய, ஆதிசேடனாகிய இருந்த வளமுடையார் கோயில். கோயிற்சிறப்பையும் கோயிலுக்கு வழிபட செல்லுகின்ற மகளிரும், மைந்தரும், இளநரை பெண்களும், முதுநரை மூதாட்டியரும், இளைஞரும், முதியரும் சேர்ந்து, நைவேத்தியத்தையும், மலர் செப்பையும், (குடையர்) தூபத்தையும், வேறு கையுறையும், அடியுறையும் ஏந்தியவர்களாய், நெருங்கி வழிபட செல்கின்றனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும் திருமாலையும், அப்பெருமானை தாங்கும் ஆதிசேடனையும் திருக்கோயிலில் எழுந்தருளுவித்து வழிபடும் சிறப்பு, இன்று போலவே இருந்தது என்பதை பரிபாடல், இப்பாட்டின் வழியில் அறிவிக்கிறது. (தொடரும்)

love is eternal.....we build homes with love

rk

radha krishna real estates

rajmani group of companies

(property developers, builders and contractors)

we invite joint venture /outright proposals from owners

Contact 9840030711, email: rkre46@gmail.com

Website: http://www.rajmanibuilders.com

**Love to Share Foundation America**

**5th Health Event- Life and Soul 2015**

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடன் Love to Share Foundation America ஐந்தாவது வருடமாக Life and Soul 2015 – ஒரு மருத்துவ முகாமை நியூ லைஃப் ப்ளாஸாவில் நடத்தி பல சேவை மனப்பான்மை கொண்ட அன்பர்களுடன் கைகோர்த்துக்கொண்டுள்ளது.

மேன்வல் மேயர் Ms. Delores Martin மற்றும் டெக்சாஸ் மாகாண பிரதிநிதி Ed Thompson நிகழ்ச்சியை துவக்கி வைத்தனர். நகரில் அவ்வமயம் இல்லாத பியர்லேண்ட் மேயர் தம் நெஞ்சம் இந்நிகழ்ச்சியிலேயே இருந்தது என செய்தி அனுப்பி இருந்தார்.

250க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு ரத்த அழுத்தம், கொழுப்பு, கண் பார்வை, சர்க்கரை, மார்பு, ஆக்சிஜன் அளவு, எலும்பு, நெஞ்சகம் முதலிய இருபது வகையான மருத்துவ பரிசோதனைகளை, இலவசமாக பெற்றனர். 50 பேருக்கு தடுப்பூசிகளும், 75 குழந்தைகளுக்கு பாதுகாப்பிற்காக தலைகவசமும் வழங்கப்பட்டது.

| ராமானுஜம்ஜி - அமெரிக்கா சத்சங்க நிகழ்ச்சிகள் | | |
|---|---|---|
| தேதி | இடம் | நிகழ்ச்சி |
| அக்டோபர் 9-15 | Detroit | பக்த விஜயம் |
| அக்டோபர் 16-20 | Orlando FL | சம்பூர்ண கிருஷ்ண கதா |
| அக்டோபர் 22-28 | Boston | பாகவத சப்தாஹம் |
| அக் 30 - நவ5 | Washington DC | பாகவத சப்தாஹம் |
| நவம்பர் 6-11 | Minneapolis | சத்சங்கம் |
| நவம்பர் 12-18 | Atlanta | பாகவத சப்தாஹம் |
| நவ 19 - டிச 1 | Dallas | மதுர உத்ஸவம் |
| டிசம்பர் 2-8 | California Bay Area | சத்சங்கம் |
| டிசம்பர் 9-16 | Seattle | சத்சங்கம் |
| டிசம்பர் 19-27 | Houston | மதுர உத்ஸவம் |

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 180. For Details: **+91-44-24895875**

- **D.D /M.O/Cheque in name of Guruji Sri Muralidhara Swamigal Mission ஏற்றுக்கொள்ளப்படும்.**
- சந்தா அனுப்ப முகவரி**: Guruji Sri Muralidhara Swamigal Mission, No. 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.**
- மூன்று வருடம் வரை மட்டுமே சந்தா பெற்றுக்கொள்ளப்படுகிறது.
- கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
- ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மதுரமுரளி விவரங்களுக்கு helpdesk@madhuramurali.org என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


| ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சிகள் | |
|---|---|
| ஏகாதசி | அக்டோபர் 8, 24 நவம்பர் 7, 22<br><br>October 8, 24 November 7, 22 |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

**To know about Satsang schedule, events & also to register your prayers, please call +91-9382393833**